IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT, UDHAGAMANDALAM) SESSIONS JUDGE OF THE NILGIRIS AT UDHAGAMANDALAM.

| | |
|---|---|
| Sessions | S.C. 54/2017 |
| | Prosecution |
| Deposition of witness for | LW 7, PW 5 |
| Name | ஜெரால்ட். |
| Father’s Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Mobile No. | |
| Email I.D | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 12th day of November 2025.

12.11.2025.

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**சத்தியமாக சொல்கிறேன்.**

**முதல் விசாரணை**:-

நான் தற்சமயம் சின்னவண்டிச்சோலையில் குடியிருந்தும், கான்ட்ரைட் வேலை செய்து வருகிறேன். கடந்த 07.01.2017 ஆம் தேதி காலை 10.00 மணியளவில் சின்ன வண்டிச்சோலையில் உள்ள ஆரோக்கியநாதன் , ஜெயமணி வீட்டருகே போலிசார் வந்து விசாரணை செய்து ஒரு மகஜர், படம் வரைந்து, அவர்கள் தயரித்த மகஜருக்கு சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். அது ஏற்கனவே அதசாஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

ஆரோக்கியநாதன், ஜெயமணி எனக்கு சொந்தகாரர் என்றால் சொந்தகாரர்கள் இல்லை. நான் கையெழுத்திட்ட ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று சொன்னால் சரிதான். நான் செல்வதற்கு முன்பே போலிசார் நான் கையெழுத்திட்ட ஆவணத்தை தயாரித்து வைத்திருந்ததனர் என்றால் இல்லை. நான் சென்ற பின்னர்தான் போலிசார் தயாரித்தார்கள். என் வீட்டிற்கும் ஆரோக்கியநாதன் வீட்டிற்கும் எவ்வளவு தொலைவு என்று கேட்டால் நடந்து வரும் தொலைவுதான். சம்பவம் நடந்த வீட்டிற்கு அருகே ஜர்ச், பள்ளி மற்றும் பெட்ப்போர்டில் இருந்து பேரட் செல்லும் சாலை உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த வீட்டின் கதவு எண் என்னவென்று சொல்ல முடியுமா என்று கேட்டால் சொல்ல முடியாது. என் முன்பாக போலிசார் மாதிரி வரைபடம் வரைந்து, பார்வை மகஜர் தயாரித்தார்கள் என்று நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. போலிசார் கேட்டு கொண்டதற்கு இனங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:-</u>**

இல்லை.

Sd/- ஜெரால்ட் ./

Typed down to my dictation, in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/ Thiru. M.Senthilkumar/
Sessions Judge,
Magalir Neethimandram,
(FTMC), Udhagamandalam.